## முகவுரை

மனித உரிமைகள் செயற்பாடுகளைப் பற்றிய தேசிய அறிக்கை – 2006
ஜனநாயகம், மனித உரிமைகள், தொழில் திணைக்களத்தின் வெளியீடு
மார்ச் 6, 2007

உலகெங்கும் ஆண்களும் பெண்களும் சுய, அரசியல் சுதந்திரத்தை பெறுவதற்காகப் பாடுபடுவதுடன் ஜனநாயக ஸ்தாபனங்களை நிறுவவும் முற்படுகிறார்கள். அனைவரும் போராடிப் பெற முயல்வது ஜனாதிபதி புஸ் கூறிவது போல் ''சுய கௌரவத்திற்காக பேரம் செய்யமுடியாத வேண்டுகோள்கள்'' ஆகும்.

துணிச்சலான தனியாரும், அரச சார்பற்ற குழுக்களும் தனிப்பட்ட ஆபத்துகளையும், வரக்கூடிய பெரும் விளைவுகளையும் மீறி, மனித உரிமைகளின் துஷ்பிரயோகங்களை வெளிப்படுத்துகின்றனர். அவர்கள் இன ரீதியாக, சமய ரீதியாக சிறுபான்மையாக உள்ளோர், தொழிலாளர், பெண்கள் ஆகியோரின் உரிமைகளைப் பாதுகாக்கவும், மனிதர்கள் கடத்தி விற்கப்படுவதைத் தடுக்கவும் முயல்கிறார்கள். அவர்கள் துடிப்புள்ள சிவில் சமூகங்களை உருவாக்குவதோடு, சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்கள் நடைபெறுவதை உறுதிப்படுத்தி, சட்டத்துக்கு உட்பட்ட ஜனநாயகத்தை ஸ்தாபிக்கவும் பாடுபடுகின்றனர்.

பொறுமையில்லாத இந்த தேசாபிமானிகள் முன்னர் முடியும் என கருதப்பட்டு விடப்பட்ட விடயங்களை மீண்டும் சீர்படுத்துகின்றனர். ஆம், அபிவிருத்தியடையும் உலகெங்கும் புது சந்ததிகளின் சுதந்திரம் விரிவடைந்ததில் கம்யூனிச நாடுகள் வீழ்ந்து புதிய ஜனநாயக நாடுகள் உருவாகின. மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனத்தில் உயர்வாக உள்ள உரிமைகள், எப்பொழுதும் இல்லாத வாறு அதிகமான நாடுகளினால் முழுமையாகக் காப்பாற்றப்படுகின்றது.

இந்த உயர்ந்த சேவை தொடர்கிறது – ஆனால் இன்னமும் அது முழுமை யடையாமல் இருப்பதோடு, பிடிவாதமான எதிர்ப்பாளர்களுக்கு முகங்கொடுக்கின்றது. இதில் ஆச்சரியமில்லை, ஜனநாயக மாற்றங்களினால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகிறவர்கள், மாற்றங்களுக்காக பரிந்து பேசுகிறவர்களையும் அதைச் செயற் படுத்துபவர்களையும் எதிர்ப்பனர். சென்ற சில ஆண்டுகளில், மனித உரிமைகளுக்கு பாதுகாப்பளிப்பவர்களையும் சிவில் சமூக அமைப்பாளர்களையும் துன்புறுத்தி, பயமுறுத்தி அவர்களின் நடவடிக்கைகளை குறைக்கவோ அல்லது முற்றாக நிறுத்தவோ முயலுகின்றவர்களை நாம் பார்த்திருக்கின்றோம். நியாயமற்ற சட்டங்கள், அரசியல் ஆயுதங்களாக சுயேச்சையான எண்ணங்களை உடையவர்களுக்கு எதிராக பிரயோகிக்கப்படுகின்றன. மாறுபட்ட கருத்துகளைத் தெரிவிப்பவர்களின் குரலை நிறுத்துவதற்கு சட்டத்துக்கு புறம்பான வழிகளைப் பயன் படுத்த முயலுகின்றனர்.

அரச சார்பற்ற நிறுவனங்களும், வேறு மனித உரிமைகளுக்கு பாதுகாப்பளிப்பவர்களும் தாக்கப்படும் பொழுது சுதந்திரமும் ஜனநாயகமும் பலவீனமாகிறது. உலகின் ஜனநாயகம், பாதுகாப்பாளர்களைக் காப்பாற்ற வேண்டும். அதுவே இப்பொழுது எமது விவகாரங்களின் சாமர்த்தியத்தின் குறிக்கோளாகும். இராசஜாங்க திணைக்களத்தின் இந்த *மனித உரிமைகள் செயற்பாடுகளைப் பற்றிய தேசிய அறிக்கை – 2006* இந்த முயற்சிகளுக்கு உதவி செய்யும் என எண்ணுகின்றோம். இந்த எண்ணங்களுடன் ஐக்கிய அமெரிக்க நாட்டு காங்கிரசுக்கு இந்த அறிக்கைகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

கொன்டோலீசா ரைஸ்
இராஜாங்க செயலாளர்

அறிமுகம்

மனித உரிமைகள் செயற்பாடுகளைப் பற்றிய தேசிய அறிக்கை – 2006
ஜனநாயகம், மனித உரிமைகள், தொழில் திணைக்களத்தின் வெளியீடு
மார்ச் 6, 2007

இந்த அறிக்கைகள் மனித உரிமைகளின் சர்வதேச கடப்பாடுகளை அரசாங்கங்கள் செயற்படுத்துவதை கூறுகின்றன. இந்த அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகளின் உலகளாவிய பிரகடனத்தை ஜனாதிபதி புஸ் கூறிவது போல் ''சுய கௌரவத்திற்காக பேரம் செய்யமுடியாத வேண்டுகோள்கள்'' ஐப் பிரதிப்பலிப்பு செய்கிறது. செயலாளர் ரைஸ் கூறுவது போல் ஐக்கிய நாடுகளின் உலகளாவிய பிரகடனத்தின் முழு உறுதிமொழிகளையும் ஒரே இரவில் பெற்று விட முடியாது; ஆனால் இது காலந்தாமதிக்கப்படாமல் உடனடியாகச் செய்ய வேண்டிய காரியமாகும்.

உலகளாவிய பிரகடனம் ''ஒவ்வொரு தனி மனிதனும், சமூகத்தின் தனி அங்கமும்… இந்த உரிமைகளுக்கும் சுதந்திரத்திற்குமான மரியாதையை தேசிய, சர்வதேச முன்னேறும் அலகுகளில் கூட்டி, அதன் மூலம் உலகளவில் சக்திவாய்ந்த அறிமுகத்தையும், கவனத்தையும் பெறுதல்… எனக் கூறுகின்றது.

ஐக்கிய அமெரிக்கா அதன் மனித உரிமைகளின் கடப்பாட்டை தீவிரமாக ஏற்றுக் கொண்டுள்ளது. எங்கள் மீதான பயங்கரவாதிகளின் தாக்குதல்களுக்கு எதிராக நாங்கள் எழுதிய அறிக்கைகளையும், நடவடிக்கைகளையும் பற்றி கேள்வி எழும்பியுள்ள நேரத்தில், நாங்கள் இந்த அறிக்கையை எழுதுவதை உணர்கிறோம். எங்கள் பங்கும் உள்ள பல்வேறு மனித உரிமைகள் ஒப்பந்தங்களில் எங்களுக்கு இருக்கும் பொறுப்பை கவனத்தில் எடுத்துக்கொண்டு காலக்கிரமாமாக நாங்கள் அனுப்பும் அறிக்கைகளின் உதவியுடன் ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் மற்றவர்களின் நம்பிக்கைக்கு ஏற்ப நேரடியாக பதிலளிக்கும். நாங்கள் அதனை தொடர்ந்தும் முன்னேற்றுவதில் கவனம் செலுத்துகின்றோம். பயங்கரவாத சந்தேகிகளை கைதுசெய்தல், நடத்துதல், விசாரணை செய்தல் போன்றவற்றில் ஐக்கிய அமெரிக்கா வைத்திருக்கும் சட்டம், கொள்கைகள், வழக்கங்கள் என்பன கடந்த ஐந்து ஆண்டுகளில் கணிசமான அளவு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. எமது அரசாங்கத்தின் ஜனநாயக முறைகள் நிச்சயமானதல்ல; ஆனால் *புரிந்து கொள்ளக் கூடியது* – எமது திடமான சமூகம், துடிப்புள்ள ஊடகம், எமது சுயாதீனமான அரசியல் கிளைகள், எமது திருத்தக்கூடிய நன்கு நிலைத்துள்ள சட்ட வேலைகள் முதலியன.

அமெரிக்க குடியரசு சட்டசபை ஆணையின் மனித உரிமைகள் செயற்பாடுகளின் பின்வரும் தேசிய அறிக்கைகள், உலகெங்கும் மனித உரிமைகளை மதிப்பதை உயர்த்துவதற்கு அமெரிக்கா எடுத்திருக்கும் முயற்சிகளுக்கான முக்கியமான மூலகங்களாகும். மூன்று சகாப்தங்களாக இந்த வருடாந்த அறிக்கைகள் இங்கும் வெளியூர்களிலும், அடைந்திருக்கும் முன்னேற்றங்களையும் அதில் இருக்கும் சவால்களையும் மதிப்பீடு செய்வதற்கு குறிப்பு ஆவணமாக விரிவாக பயன்படுத்தப்பட்டு வரப்படுகின்றது. இந்த அறிக்கைகள், தொடர் துஷ்பிரயோகளை முடிவுக்கு கொண்டு வரவும், அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்கு நாடுகளின் மனோசக்தியை பலப்படுத்துவதற்கும் அரசாங்கங்கள், நிறுவனங்கள் மற்றும் தனி நபர்கள் கூட்டாக இணைந்து செயற்படுவதற்கு ஒரு அத்திவாரமாக இருக்கின்றது.

இந்த அறிக்கைகள் ஒவ்வொரு நாட்டினதும் 2006 ஆம் ஆண்டு செயலாற்றத்தை விமர்சிக்கின்றது. ஒவ்வொரு நாடும் அந்தந்த நாட்டிற்காக பேசுகின்றது. மேலும், விரிவான மாதிரிகள் பகுத்துணரப்பட்டுள்ளதோடு நாடுகளின் விசேடமான உதாரணங்களின் துணையோடு கீழே விபரமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நாங்கள் மேற்கோள் காட்டியுள்ள உதாரணங்கள் சுருக்கமானவை, விரிவானவையல்ல.

**நம்பிக்கையான போக்குகள், மேலும் மிதமான உண்மை நிலை**

இந்த அறிக்கைகளின் மதிப்புரை காட்டுவது போல், 2006 இல் உலகெங்கும் உள்ள ஆண்களும், பெண்களும் அவர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும், அவர்களின் அரசாங்கங்கள் அவர்களின் குரலைக் கேட்கவும், அவர்களின் வாக்குகளை எண்ணவும், நியாயமான சட்டமும், அனைவருக்கும் நீதியும் கிடைக்கவும் வேண்டுமென தொடர்ந்து அழுத்தம் கொடுக்கின்றனர். கௌரவம், சுதந்திரம் மற்றும் சமத்துவத்துக்கான மக்களின் கோரிக்கைகளுக்கு விடை காண மிகச் சிறந்த முறை ஜனநாயக அரசியல் முறை என்பதற்கான அங்கீகரிப்பு அதிகரித்துள்ளது. இவையனைத்தும் நம்பிக்கையான போக்குகளாகும், ஆயினும் அறிக்கைகள் மிதமான உண்மை நிலைகளையும் பிரதிபலிக்கின்றன.

**முதலில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக ரீதியில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் மிகச் சிரமத்துடன் வெற்றி கண்டதுடன் அவற்றை நிலை நிறுத்துவதும் சவாலாக அமைந்தது. சில நாடுகள் குறிப்பிடத்தக்க அளவு முன்னேறின, சில தாமதம் செய்தன; வேறு சில பின்னோக்கிச் சென்றன.**

கீழ்காணும் பலவகை உதாரணங்களும் காட்டுவதுபோல், ஒவ்வொரு நாட்டினதும் செயல் நடவடிக்கைகளும் அந்தந்த நாட்டின் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு, பொது ஸ்தாபனங்களின் ஆற்றல், ஊழல்களின் அளவு மற்றும் சிவில் சமூகத்தின் பலம் என்பனவற்றை பொறுத்து பெருமளவு மாறுபடுகின்றன.

ஜனவரி 2006 இல் **லைபீரியா** ஜனநாயக முறையில் ஆபிரிக்கா தேசத்தின் முதல் பெண் தலைவராக எலன் ஜோன்சன்-சர்லீபை தலைவராகக் கொண்ட யுனிடி கட்சி அரசு தேர்ந்தெடுக்கப்பட்டு, 2003 இல் 14 வருட சிவில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தப் பின்னர் இடைக்கால அரசாங்கமாக இருந்த லைபீரியா தேசிய இடைக்கால அரசாங்கத்தை (யேவழையெட வுசயளெவைழையெட புழஎநசஅநெவெ ழக டுடைநசயை) மாற்றி பதவிக்கு வந்தது. அரசாங்கம், குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை முன்னைய மனித உரிமைகள் குறைப்பாடுகளைத் திருத்துவதற்காக எடுத்தது. அதில் அது சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து நாட்டின் நீதித் துறையை புனர்நிர்மாணம் செய்ததும், தலைநகரில் ஒரு பொது காப்பாளர் காரியளயத்தை நிறுவியதும் அடங்கும். ஜனாதிபதி ஊழல் செய்த பல அதிகாரிகளை வேலை நிறுத்தமோ, இடை நிறுத்தமோ செய்தார். 2005 இல் ஆரம்பிக்கப்பட்ட உண்மை மற்றும் ஒருமைப் படுத்தும் ஆணைக்குழு (வுசரவா ரூ சுநஉழஉெடைடயவழைெ ஊழஅஅளைளழைெ), உள்நாட்டு யுத்தத்தின் பொழுது நடந்த மனித உரிமை மீறல்களையும் யுத்த குற்றங்களையும் புலன் விசாரணை செய்வதற்காக சாட்சிகளிடம் இருந்து வாக்குமூலங்களைப் பெற தொடங்கியது. இந்த முன்னேற்றங்கள் காணப்பட்டாலும், லைபீரியா இன்னமும் பலவீனமாக இருக்கும் நீதித்துறை, உத்தியோகபூர்வ ஊழலும் பயமுறுத்தி காரியமாற்றுதலும், பாலியல் அடிப்படை வன்முறை, கடுமையான வறுமையும் அது வழி வகுக்கும் சிறுவர் தொழில்கள் போன்ற காரணங்களினால் தொடர்ந்தும் மனித உரிமை சவால்களுக்கு முகங்கொடுத்து வருகிறது.

இந்த வருடத்தில் **இந்தோனேசியாவில்** அரசியல் ரீதியாக உணர்ச்சி வசமாகவுள்ள பிரதேசங்களில் இராணுவ படையினராலும், பொலிஸாராலும் நடத்தப்படும் கொலைகள் தொடர்ந்தும் கணிசமான அளவு குறைந்திருக்கின்றன. பொதுவாக சுதந்திரமும், நியாயுமுமான ஐம்பத்தி நான்கு தேர்தல்கள் மாகாண, பிரதிநிதி, மாவட்ட, நகரசபை மட்டங்களில் நடைப்பெற்றது. முக்கியமாக ஆச்சே மாகாணத்தில் டிசெம்பர் மாதத்தில் நடந்த தேர்தலில் முன்னால் போராளி படைத்தலைவர், ஆளுனராக (கவர்னர்) தெரிவு செய்யப்பட்டுள்ளார். இன சமயங்களுக்கு இடையே வன்முறைகள் குறைந்தாலும், அவை சில பகுதிகளில் தொடர்ந்தன. இந்தோனேசியாவிலும் கிழக்கு திமோரிலும் முன்னைய மனித உரிமை துஷ்பிரயோகங்களையும் அக்கிரமங்களையும் அரசாங்கத்தினாலும் நீதிமன்றங்களினாலும் எதிர்கொள்ள முடியவில்லை

**மொரக்கோ** மனித உரிமைகள் அறிக்கைகள் அங்கு குறிப்பிடத் தக்க அளவு முன்னேற்றங்கள் காணப்படுவதாகவும், ஆனால் பிரச்சினைகள் இன்னும் இருப்பதாகவும் தெரிவிக்கின்றன. 1956 தொடக்கம் 1999 வரையிலான கால கட்டத்தில் ஏற்பட்ட குறிப்பிட்ட கைதுகள், காணாமற்போதல், மற்றும் துஷ்பிரயோகங்களுக்கான மனித

உரிமைகள் ஆலோசனைக் குழுவினால் நஷ்ட ஈடு வழங்குவதன் மூலம் முன்னால் மனித உரிமை துஷ்பிரயோகங்களை எதிர்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. மார்ச் மாதம் அரசாங்கம் சித்திரவதை எதிர்ப்பு சட்டத்தை இயற்றியது; ஆனால் இன்னும் பல காவல் படைகளின் கிளைகளில் சித்திரவதை செய்யப்படுவதாக அறிக்கைகள் கூறுகின்றன. இதைப்பற்றிய பொது விவாதம் பெரிய அளவில் பொது இடங்களிலும் ஊடகங்களிலும் தொடர்ந்தும் பேச்சு, ஊடக சுதந்திரத்திற்கு கட்டுப்பாடுகள் இருந்தும் நடத்தப்படுகின்றன. இந்த வருடத்தில் அரசாங்கம் சில ஊடகவியலாளர்களை சுதந்திரமாக பேசக் கூடிய அளவை மீறிய காரணத்தினால் தண்டித்தது. அதிகமான ஊடகவியலாளர்கள் தங்களுக்கு சுய தணிக்கையை வைத்துக் கொண்டுள்ளனர். பாலியல் சுரண்டலுக்காகவும், சிறுவர் தொழிலுக்காகவும் ஆட்களைக் கடத்தி விற்றல் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினையாக உள்ளது. அரசாங்கமும் சிவில் சமூகமும் அதனை தடுப்பதற்கு அதிக அளவு செயற்பாடுகளை மேற்கொள்கின்றன.

**கொங்கோ ஜனநாயக குடியரசு** அதன் முதலாவது ஜனநாயக ஜனாதிபதி மற்றும் சட்டசபைக்கான தேர்தல்களை 45 ஆண்டுகளுக்குப் பின்னர் நடத்தி, அதன் மூன்றாண்டு சிவில் யுத்தத்திற்குப் பின்னரான பெயர்ச்சிக் கால கட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தது. புதிய அரசியல் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆயினும், மனித உரிமைகளின் அறிக்கை மோசமாகவே இருக்கிறது. கிழக்கில் யுத்தம் கொந்தளித்துக் கொண்டிருக்க, அங்கு அரசாங்க கட்டுப்பாடு பலவீனமாக இருப்பதனால் ஆயுத குழுக்கள் தொடர்ந்தும் கடுமையான துஷ்பிரயோகங்களை மேற்கொள்கின்றன. அரசாங்க படைகளும் நாடெங்கும் கடுமையான துஷ்பிரயோகங்களை செய்கின்றன.

**ஹெய்டியில்,** குடிமக்கள் அவர்களுக்கு ஜனநாயகத்தின் மேல் உள்ள கடப்பாட்டை 2006 இல் மும்முறை வாக்களித்து உறுதி செய்து கொண்டனர்.
3.5 மில்லியனுக்கும் மேலாக மக்கள் வாக்களிப்பதற்காக பதிவு செய்து கொண்டுள்ளனர். அத்துடன் பெப்ரவரி மாதம் நடைப்பெற்ற முதல் சுற்று ஜனாதிபதி, பாராளுமன்ற தேர்தல்களில் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் சுமார் 70 சதவீதமானோர் வாக்குப் பதிவு செய்துள்ளனர். நிலையான, வன்முறையற்ற தேர்தல் நடவடிக்கைகளில், வாக்காளர்கள் ஜனாதிபதி ரெனி பிரிவலை தெரிவு செய்ததோடு, 129 பாராளுமன்ற அங்கத்தினரையும் தெரிவு செய்தனர். டிசெம்பர் மாதம், அதன் முதல் மாநகர தேர்தலை ஒரு தசாப்தத்திற்குப் பின்னர் நடந்தது. ஆயினும் அதன் சட்டத்தை மீண்டும் முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு செயற்படாமலிருக்கும் நீதி துறையை சீர்படுத்தி, ஹெய்டியின் தேசிய பொலிஸுக்கு தொடர்ச்சியான மீள்பயிற்சிகளையும், தெரிவுகளையும் செய்ய வேண்டும்.

**யுக்ரெய்னில்**, ஒரேன்ஞ் புரட்சிக்குப் (ீழளவ – முசயபெந சுநஎழடரவழைெ ிசழபசநளள) பிறகு மனித உரிமைகள் நடவடிக்கைகளில் கவனிக்கத் தக்க முன்னேற்றம் தொடர்கிறது. மார்ச் 2006 பாராளுமன்ற தேர்தல்கள், 15 வருட சுதந்திரத்துக்குப் பின்னர் நடைப்பெற்ற முதல் தேர்தலாகும். ஊடக சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம், சிவில் சமூக முன்னேற்றம் போன்ற பல முன்னேற்றங்கள் நாட்டில் தொடர்கிறது. இவ்வளவு நன்மைகள் கிடைத்தாலும் அனைத்து அரசாங்க கிளைகளிலும் ஊழல் போன்ற சில மோசமான பிரச்சினைகளும் இருக்கின்றன.

**கிறிகிஸ்தானில்** 2005 இல் புதிதாக ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமைத்துவம் இருந்ததனால், மனித உரிமைகள் அறிக்கைகளில் கணிசமான அளவு முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தன. அப்படியிருந்தும் 2006 ஆம் ஆண்டு தணிக்கைகளுக்கும் பிரச்சினைகளை சீர்தூக்கிப்பார்ப்பதற்குமாக அவசரமாக திருத்தம் செய்யப்பட்ட அரசியல் சாசனத்துக்கு எதிர்ப்பாக ஒரு வார அமைதி போராட்டம் உச்ச கட்டத்தில் நடைப்பெற்றது. எனினும் டிசெம்பர் கடைசியில் பாராளுமன்றம் முக்கிய தணிக்கைகளையும், பிரச்சினைகளை சீர்தூக்கிப்பார்த்தலையும் மறுக்கும் வேறு ஒரு சாசனத்தை பிரகடனப்படுத்தியது. அத்துடன் அரசாங்கம், வெளிநாட்டில் இருந்து நிதி உதவிகளைப் பெறும் அரச சார்ப்பற்ற நிறுவனங்களை (பேமுளள) துன்புறுத்தியது.

**பாகிஸ்தானில்** ஜனாதிபதி முஷராப் ஜனநாயக மாற்றத்தில் அர்ப்பணம் செய்வதிலும், ''புதுமையை உண்டாக்குவதில்'' ஆர்வம் அளித்தாலும், அங்கு மனித உரிமைகள் அறிக்கைகள் மோசமாகவே இருக்கின்றன. நடமாடுவதற்கும், உணர்வுகளை

வெளிப்படுத்துவதற்கும், ஒன்று கூடவும், சமயங்களுக்கும் கட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரமே இருக்கின்றது. மாகாண செயற்பாட்டாளர்கள், அரசியல் எதிரிகள் போன்றவர்கள், முக்கியமாக உள்நாட்டு கொந்தளிப்புகளும், பயங்கரவாதமும் தலைதூக்கியுள்ள மாகாணங்களில் காணாமற்போதல் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. பாதுகாப்பு படைகள் தொடர்ந்தும் சட்டத்துக்கு புறம்பான கொலைகளை செய்தவண்ணம் இருக்கின்றன. விசாரணையின்றிய கைதுகளும், சித்திரவதைகளும் சாதாரணமாக நடைப்பெறுகின்றது. அரசாங்கத்திலும், பொலிஸ் படையிலும் ஊழல் வக்கிரமாக இருக்கின்றது. ஒரு நன்மை ஏற்பட்டிருக்கிறது; கடந்த டிசெம்பர் மாதம் தேசிய அரசாங்கத்தில் ஜனாதிபதி முஷராப் ஒரு பெண்கள் பாதுகாப்பு சட்டத்துக்கு கைச்சாத்திட்டார் – மூன்று சதாப்தங்களாக பாகிஸ்தானிய அரசாங்கம் ஒன்று செய்யாததை, பெண் உரிமைகளுக்கு நட்டம் விளைவிக்கும் சட்டங்களை வெற்றிகரமாக இல்லாமற் செய்தார். 1979 கற்பழிப்பு, விபசார செயல்களுக்கான ஹுடுட் சட்டங்களில் திருத்தம் கொண்டுவரப்பட்டு கற்பழிப்பு குற்றங்கள், பாகிஸ்தான் ஷாரியா சட்டத்தில் இருந்து பாகிஸ்தான் தண்டனை நீதிக் கோவையின் கீழ் கொண்டு வரப்பட்டது. அத்துடன் சட்டம் கற்பழிப்பு குற்றங்களை நிரூபிப்பதற்கு நான்கு ஆண் சாட்சிகள் தேவை என்பதை இல்லாமல் ஆக்கியது.

**எகிப்து** முதல் முறையாக பல கட்சி ஜனாதிபதி தேர்தலை 2005 இல் நடத்தியது. 2006 இல் மேலதிக ஜனநாயகத்திற்காகவும் உத்தரவாதங்களுக்குமான மக்களின் அறைகூவல்கள், அரசாங்கத்தின் பெரும் எதிர்ப்புகளை சந்தித்தன. தொடர்ந்தும் முன்னைய ஜனாதிபதி வேட்பாளரான அய்மன் நவூரை கைது செய்து வைத்திருப்பது, அந்த நாட்டின் அரசியல் மாற்றங்களையும் ஜனநாயகத்தையும் பற்றி பெரும் கவலையை உண்டாக்கியுள்ளது. தடை செய்யப்பட்டு ஆனால் சகித்துக் கொள்ளப் பட்டிருக்கும் இஸ்லாமிய மத குழுக்களுடன் தொடர்புடைய தீவிர போக்குடைய நூற்றுக்கணக்கானவரை கைது செய்து சில வாரங்களுக்கு காவல் வைத்திருக்கும் 2005 இல் ஆரம்பித்த அரசாங்கத்தின் போக்கு தொடர்ந்தது. சுயாதீன நீதித் துறையின் அவசியத்தை பகிரங்கமாகக் கூறயதால் பெப்ரவரி மாதம் இரண்டு சிரேஸ்ட நீதிபதிகள் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். சுயாதீன நீதி விசாரணைகள் வேண்டுமென போராட்டத்தில் ஈடுபட்ட 500 பேரை எகிப்திய பொலிஸார் கைது செய்து காவல் வைத்தனர். அத்தோடு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட கடுமையான சித்திரவதைகளைப் பற்றியும் ஆவணப்படுத்தப் பட்டிருக்கிறது. அரசாங்கம் பல இன்டர்நெற் முற்றுகையாளர்களையும் கைது செய்து, காவல் வைத்து, அவர்கள் மேல் துஷ்பிரயோகம் செய்துள்ளது.

**கசகஸ்தானில்** அரசாங்கம் அரசியல் எதிரிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தி வைத்துள்ளது; அரசியல் கட்சிகள் பதிவு செய்து கொள்வதற்கு கடினமான நிபந்தனைகளை விதித்துள்ளதுடன், அக்கட்சிகளின் பதிவுகளுக்கு தடங்கல் செய்யவோ அல்லது மறுப்போ அளித்துவிடுகின்றது. அரசாங்கத்துக்கு சார்பான கட்சிகள் ஒன்று சேர்ந்திருப்பது, ஜனாதிபதி நசாபயீவை தலைவராகக் கொண்ட ஓட்டன் கட்சியை பலமுள்ளதாகச் செய்துள்ளதோடு, எதிரிடையான கருத்துகளை கொடுக்கப்பதற்கும், மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும் சிறிய அரசியல் இடைவெளியையே வைத்துள்ளது. அரசாங்கம் அரசியல் எதிரிகளை, அரசியல் காரணங்கள் கூறி குற்றம் சுமத்துவதையும், ஒன்று கூடும் சுதந்திரத்தை கட்டுப்படுத்தவும், ஊடக சுதந்திரத்தை சட்டமியற்றி கட்டுப்படுத்தவும், அரச சார்பற்ற நிறுவனங்களை துன்புறுத்தவும் செய்கின்றது.

**ரஷ்யாவில்** தொடர்ந்தும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட குழுவிடமே அதிகாரங்கள் மையப்படுத்தப்பட்டுள்ளதுடன் கொண்டுவரப்பட்ட புதிய தேர்தல் சட்டத் திருத்தங்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கான புதிய சட்டங்கள் அரசியல் கட்சிகளை ஒழுங்கு படுத்தல், விசாரணை செய்தல், மட்டுப்படுத்தல் அல்லது கட்சியை மூடிவிடுதல் போன்ற விரிவான அதிகாரங்களை நிறைவேற்று அதிகாரங் கொண்ட குழுவுக்கு வழங்குகின்றன. இணங்கிச் செயற்படும் பாராளுமன்றத்துடன் சேர்ந்து விளைவிக்கும் ஊழல், நீதியை நடைமுறைப்படுத்துவதில் காண்பிக்கப்படும் பாரபட்சம், நீதித் துறை மேலான அரசியல் அழுத்தங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஊடகத்துறை மேலான கட்டுப்பாடுகள், அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மையை மேலும் குன்றச் செய்தது. செசினியாவிலும் வட பிராந்தியத்தில் இணையாட்சி நடத்தும் ஏனைய பகுதிகளிலும் செசினிய ஜனநாயக பாதுகாப்பு படைகள் மற்றும் இணையாட்சிப்

படைகள் சட்டத்துக்கு புறம்பாக பொதுமக்களை கொலை செய்தல், துஷ்பிரயோகங்கள் செய்தல் போன்ற செயல்களினால் கடுமையான மனித உரிமை மீறல்கள் தொடர்கின்றன. எதிர்ப்பு போராளிகள் பயங்கரவாத குண்டு தாக்குதல்களையும் அரசியல் காரணங்களுக்காக ஆட்கடத்தலையும் இந்த பகுதியில் செய்கின்றனர். ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றம், அதிகரிக்கும் இவ்வாறான சம்பவங்களுக்கு ரஷ்யாவையே பொறுப்பாளியாக கூறுகிறது.

**வெனிசியூலாவில்** சாவேஸிய அரசாங்கம் தொடர்ந்தும் நிறைவேற்று கிளையில் அதிகாரங்களை பலப்படுத்துகின்றது. தொடர்ந்தும் அரசாங்கம் எதிர்க்கட்சிகளையும் அரச சார்பற்ற நிறுவனங்களையும் துன்புறுத்துவதோடு நீதித்துறை சுதந்திரமாக செயல்படுவதையும் பலவீனப்படுத்துகின்றது. சர்வதேச அவதானிகள், டிசெம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் பொதுவாக சுதந்திரமும் நியாமுமாக நடைப்பெற்றதாக கூறுகின்றனர்; அதில் ஜனாதிபதி சாவேஸ் 63 சதவீத வாக்குகளுடன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். ஜனாதிபதி சாவேஸ் அவருடைய அங்குரார்பண உரையில், 100 சதவீத இடங்களை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அவருடைய தேசிய பாராளுமன்றத்திடம் நாட்டை ஆளுவதற்கு அவருக்கு நிறைவேற்று அதிகாரத்தைக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

**பிஜி, தாய்லாந்து** நாடுகளில் இராணுவம் ஜனநாயக அரசாங்கங்களை கவிழ்த்துவிட்டன.

**அடுத்த தெளிவான உண்மை என்னவென்றால், உள்நாட்டு அல்லது எல்லைக் கோட்டு யுத்தங்களினால் ஏற்படும் பாதுகாப்பின்மை மனித உரிமைகளையும் ஜனநாயக அரசாங்கங்களையும் பயமுறுத்துவதோடு முன்னேற்றங்களையும் இடையூறு செய்கின்றது.**

**ஈராக்** அரசாங்கம், தேசத்தை மீள் இணைத்து, மீள் நிர்மாணம் செய்து தேர்தல் முறைகளை நடத்தி சட்டத்தை நிலை நிறுத்த வேண்டுமென தொடர்ந்து அர்ப்பணம் செய்தாலும், அங்கு நடைபெறும் ஆழ்ந்த மதக்குழுக்களுக்கிடையே நடைபெறும் வன்முறைகளும், பயங்கரவாத நடவடிக்கைகளும், 2006 காலகட்டத்தில் மனித உரிமைகள், ஜனநாயக முன்னேற்றங்கள் என்பவற்றை மோசமாக கீழே தள்ளிவிட்டன. ஈராக் நாட்டு அரச அமைப்பும் சட்டமும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஒரு பலமான திட்டவரம்பை வைத்திருந்தாலும், ஆயுத குழுக்கள் இரு வேறு திசைகளில் மனித உரிமைகளைத் தாக்குகின்றன. அரசாங்கத்தின் மேல் விரோதம் வைத்திருப்பவர்கள் - அல் குவெய்தா பயங்கரவாதிகள், ஒத்துப் போகாத மீதமுள்ள பாதிஸ்ட் ஆட்சி ஆதரவாளர்கள், கொரில்லா யுத்தத்தில் ஈடுபடும் கிளர்ச்சிக்காரர்கள் ஒருபுறத்திலும், அரசாங்கத்துடன் இணைந்த ஷியா இராணுவ அங்கத்தவர்கள் மற்றும் அமைச்சர்களின் தனிப்பட்ட காவல் படைகள் மறுபுறத்திலும் சித்திரவதையையும் வேறு துஷ்பிரயோகங்களையும் மேற்கொள்கின்றனர்.

**ஆப்கானிஸ்தான்** 2001 இல் தலிபான் ஆட்சி வீழ்ச்சியடைந்த பின் முக்கியமான மனித உரிமை முன்னேற்றங்களை அடைந்தாலும், அதனுடைய மனித உரிமை அறிக்கைகள் தொடர்ந்தும் மோசமாகவே இருக்கின்றன. இதற்கு பலவீனமான மத்திய அரசு இருப்பதும், கொடிய கலகக்காரர்கள் இருப்பதும் காரணமாகும்: தலிபான், அல் குவெய்தா, வேறு தீவிரவாத குழுக்கள் என்பன அரசாங்க அதிகாரிகள், பாதுகாப்பு படைகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வேறு உபகாரம் செய்பவர்கள் மற்றும் நிராயுதபாணி பொது மக்கள் போன்றவர்களை தாக்குகின்றன. அத்துடன் தற்கொலை குண்டு தாக்குதல்களின் எண்ணிக்கை இந்த வருடத்தில் குறிப்பிடும் அளவுக்கு அதிகரித்துள்ளது; தாக்குதல்கள் பாடசாலைகளிலும் ஆசிரியர்களின் மேலும் நடத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து நியாயமில்லாத கைதுகள், சிறை வைத்தல், சட்டத்துக்கு புறம்பான கொலைகள், சித்திரவதை, மற்றும் மோசமான சிறைச்சாலை நிலைமைகள் போன்ற பல சம்பவங்களைப் பற்றிய அறிக்கைகள் வந்துக் கொண்டிருக்கின்றன. டிசெம்பர் மாதத்தில், முன்னைய மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டு வர மாற்றங்களுக்கான நீதியை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டை வரைந்ததுடன் நாட்டின் நீதி முறைமைகளில் நிறுவனங்களின் திறமையையும் முன்னேற்ற திட்டங்களையும் ஜனாதிபரி கார்சாய் வகுத்தார்.

2005 இல் முன்னால் பிரதமர் ரபீக் ஹரிரி கொலை செய்யப்பட்ட பின் மேலும் மூன்று தசாப்த ஆக்கிரமிப்பின் பின் சிரியாவின் படை அணிகள் வெளியேறிய பின் **லெபனனால்** சீர்திருத்தங்களுக்காக எடுக்கப்பட்ட கணிசமான நடவடிக்கைகள் ஹிஸ்புல்லா - இஸ்ரேல் படைகளிடையே 2006 ஜுலை – ஆகஸ்ட் மாதங்களில் ஏற்பட்ட மோதலினால் தடையானது. யுத்தத்திற்கு முன்னர், லெபனன் அரசாங்கம் அரசியல் சங்கங்கள், கட்சிகள் என்பவற்றுக்கு இருந்த தடைகள் பலவற்றை நீக்க ஆரம்பித்திருந்தது. லெபனன் நாட்டிலிருந்து ஹிஸ்புல்லா உள்ளே நுழைந்து பல இஸ்ரேலிய போர் வீரர்களை கடத்தி, கொலை செய்தனால், பதிலளிக்கும வகையில் இஸ்ரேலிய இராணுவத்தினர் லெபனன் நாட்டினுள் நுழைந்தனர். இங்கு ஐநா நுழைந்து, யுத்த நிறுத்த பிரேரணைகளைச் செய்த பின் யுத்தம் முடிவுக்கு வந்தது. யுத்தம் நிறுத்தப்பட்டு, லெபனன் இராணுவ படையினரும் ஐநா இடைக்கால படையினரும் தெற்கில் இருக்க லெபனிய போராளிகளும் ஹிஸ்புல்லாவும் கணிசமான செல்வாக்குகளை நாட்டின் பல பகுதிகளில் வைத்துக் கொண்டுள்ளனர்.

**கிழக்கு திமோரில்**, தேசிய பாதுகாப்பு படைகளுக்கும் இராணுவம், பொலிஸ் படைகளிலிருந்து விலகிச் சென்ற பல்வேறு குழுக்களுக்கும், பொது மக்கள் படைகளுக்கும் இடையில் நடைபெறும் பயங்கர சண்டைகள் தலைநகரில் கலகங்களுக்கும், கும்பல் வன்முறைகளுக்கும் பரவலாக வழிவகுத்துள்ளது. அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, மலேசியா, போர்த்துகல் ஆகிய நாடுகளின் படைகள் தலைநகரின் பாதுகாப்புக்கு பொறுப்பாக இருக்கின்றன. ஆகஸ்ட் 25 ஆம் திகதி, கிழக்கு திமோருக்கான ஐநா ஒன்றுசேர் தூதுக்குழு, அங்கு பொலிஸ் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. உள்நாட்டு யுத்தம் ஏறத்தாள 150,000 பேரை அதாவது, 15 சதவீதத்திற்கும் மேலானோரை உள்நாட்டில் இடம்பெயரச் செய்துள்ளது.

**மூன்றாவதாக, உலகின் அனைத்து பிரதேசங்களும் மனித உரிமைகள், ஜனநாயக அடிப்படை கொள்கைகள் என்பவற்றினால் நன்மையடைந்திருந்தாலும், பெரும்பாலான மனிதர்கள் இன்னமும் பயத்திலேயே வாழ்ந்துக் கொண்டு விடுதலைக்காக கனவுக் கண்டு கொண்டிருக்கிறார்கள்.**

எந்த நாடுகளில் அதன் ஆட்சிப் பொறுப்பு பொறுப்பற்ற ஆட்சியாளர்களின் கையில் - அவர் எல்லையற்றவராக இருந்தாலும் கொடுங்கோலனாக இருந்தாலும் - இருக்கின்றதோ அவர் முறையாக மனித உரிமை மீறல்களைச் உலகிலேயே அதிகம் செய்பவர் ஆவார்.

2006 இல் **வட கொரியாவே** இன்னமும் உலகில் அதிகமாக தனிமைப்படுத்தப்பட்ட, அடக்குமுறையான ஆட்சிமுறையைக் கொண்டிருக்கின்றது. இந்த ஆட்சி ஏறத்தாள குடிமக்களின் அனைத்து நிலைகளையும் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. பேச்சு, ஊடக, ஒன்று கூடும், கட்சி சுதந்திரங்கள் மறுக்கப்பட்டு, அவர்களின் நடமாட்டத்தையும், தொழிலாளர் உரிமைகளையும் கட்டுப்படுத்தி வைத்துள்ளது. அரசியலமைப்பு, ''சமய நம்பிக்கைகளில் சுதந்திரத்தை'' க் கொடுத்துள்ளது. ஆயினும் உண்மையான சமய வழிபாடுகளுக்கான சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது. அரசியல் கைதிகள் உட்பட ஏறத்தாள 150,000 – 200,000 மக்கள் தடுப்புகாவல் முகாம்களில் வைக்கப்பட்டிருப்பதுடன், பல கைதிகள் சித்திரவதை, பட்டினி, தொற்று நோய் மற்றும் பாதுகாப்பின்றி வெளியில் கிடத்தப்பட்டதனால் இறந்து விட்டனர்.

**பர்மாவின்** இராணுவ அரசாங்கம் பெரும் அளவில் மரண தண்டனைகள், கற்பழிப்பு, சித்திரவதை, காரணமின்றி காவல் வைத்தல், முழுக் கிராமத்தையும் பலாத்காரமாக வேறு இடத்திற்கு - குறிப்பாக இன சிறுபான்மையினரை இடம் பெயரச் செய்தல் போன்ற காரியங்களை அதிகாரத்தை கையில் வைத்துக் கொள்வதற்காக செய்கின்றது. சிறைக் கைதிகளும், காவல் கைதிகளும் துஷ்பிரயோகத்திற்கு ஆளாவதோடு, இரக்கமற்ற, உயிர் ஆபத்தான நிலையில் வைக்கப்படுகின்றார்கள். அரசியலில் தீவிரமாக இருப்பவர்கள் கடுமையான மேற்பார்வை, துன்புறுத்தல், சிறை வைத்தல் போன்றவற்றுக்கு ஆளாகின்றார்கள். நோபல் பரிசை வென்ற எதிர் கட்சி தலைவியான ஆங் சன் சு கி தொடர்புகள் எதுவுமின்றி வீட்டுக் காவலில் வைக்கப் பட்டிருக்கின்றார். 1,100 க்கும் மேற்பட்ட அரசியல் கைதிகள் சிறையில் வாடுகின்றனர். பலாத்காரமாக தொழில் வாங்குவது, ஆட்களை கடத்தி விற்பது, சிறுவர்களை

இராணுவ சேவையில் ஈடுபடுத்துவது, சமய பாரபட்சம் காண்பிப்பது போன்றவை பரவலாகக் காணப்படுகின்றது. அரசாங்கத்தினால் ஆங்காங்கு தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட, சுதந்திர விவாதங்கள் மறுக்கப்பட்ட போலி தேசிய சபையை அரசாங்கம் மீண்டும் கூட்டியது. "ஜனநாயகத்திற்கான வழி" என விளம்பரப் படுத்தப் படுகின்ற தேசிய சபை 1990 இல் நடத்தப்பட்ட தேர்தல் முடிவுகளை செல்லுபடியாகாததாக்கி அரசாங்கத்துக்குச் சார்பான அரசியலமைப்பை அங்கீகரிப்பதற்காக வடிவமைக்கப்பட்டது. ஆட்சியாளர்களின் கொடூரமான, அழிவையுண்டாக்கும் மோசமான ஆட்சி அகதிகளை அபரிதமாக்கியதுடன், தொற்று நோய்களை பரவச்செய்து, போதை பொருட்களையும் மனிதர்களையும் அண்டைய நாடுகளுக்கு கடத்தி விற்றலை அதிகமாக்கியுள்ளது.

**ஈரானிய** அரசாங்கம் பேச்சு சுதந்திரம், ஒன்று கூடும் சுதந்திரம் என்பனவற்றை தடுப்பதோடு, எதிர்ப்பாளர்களை தாக்குவதை கடுமையாக்கி, ஊடகவியலாளர்கள், சீர்திருத்தவாதிகள் போன்றவர்களை சட்டத்துக்கு புறம்பான கைது, காவல் வைத்தல், சித்திரவதை செய்தல், காணாமற்போதல், அளவுக்கதிகமான தண்டனைகளை அளித்தல், நீதியான பொது விசாரணைகளை பரவலாக மேற்கொள்ளாதிருத்தல் போன்றவற்றை மேற்கொள்கின்றது. அரசாங்கம் தொடர்ந்தும் பாஹாய்ஸ், மற்றும் வேறு சமய சிறுபான்மையாளர்களை காவல் வைத்து துஷ்பிரயோகம் செய்வதோடு, அனைவரது கண்டனத்துக்கும் உள்ளான பேரழிவு என்று ஒன்று இல்லை என்பதைப் பற்றிய பெருங்கூட்டம் ஒன்றை நடத்தியது. டிசெம்பர் 15 ஆம் திகதி சமார்த்தியசாலிகளின் கூட்ட தேர்தல்களுக்கு மனு செய்திருந்த மூன்றில் இரண்டு பேர் - பெண் வேட்பாளர்கள் உட்பட தகுதியற்றவர்களென நிராகரிக்கப்பட்டதனால் பல இடங்களுக்கு போட்டியிடுவதற்கு எவருமே இருக்கவில்லை. தேசிய அளவில் மாநகர தேர்தல்களுக்காக போட்டியிட்ட நூற்றுக் கணக்கான வேட்பாளர்களும் நிராகரிக்கப்பட்டனர். 2006 இல் அரசாங்கம் தொடர்ந்தும் உள்நாட்டில் இருந்தும், சர்வதேசங்களில் இருந்தும் அரசாங்கம் பொறுப்பாக இருக்க வேண்டுமென கேட்டுக்கொள்வதை அலட்சியப்படுத்துவதோடு, சிரியா, லெபனன் போன்ற நாடுகளில் உள்ள பயங்கரவாத குழுக்களுக்கு ஆதரவு நல்கி, ஐநா அங்கத்துவ நாடொன்றை அழிப்பதற்கு முயலுகின்றது.

**சிம்பா**வே யில் உள்ள முகாபே அரசாங்கம் தொடர்ந்தும் பரவலாக மனித உரிமை மீறல்களை மேற்கொள்கின்றது. அதிகார பூர்வ ஊழல்களும் பயமுறுத்தி காரியமாற்றுவதும் பரவலாக நடைபெறுகின்றது. 2002 இல் அதிகார பூர்வ இரகசிய சட்டங்களும், பொது சட்டங்களும், பாதுகாப்பு சட்டங்களும் அமுல் செய்யப்பட்டுள்ளதனால் மக்களின் சுதந்திரம் கடுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 2006 பாரளுமன்ற இடைத் தேர்தலிலும், கிராம சபை தேர்தல்களிலும் அரசாங்கம் தேர்தல் நடைமுறைகளை மாற்றியமைத்ததினால், வாக்காளர்களினால் சுதந்திரமாக வாக்களிக்க முடியாமல் போனதுடன், தேர்தல் ஆளும் கட்சி வேட்பாளர்களுக்கு சாதகமாக முடிவடைந்தது. ஆளும் கட்சியின் ஆதிக்கம் அரசியல் சட்ட மாற்றங்களை எவ்வித ஆலோசனையும் இல்லாமல் மாற்றுவதற்கு வழிவகுத்தது. காவல் படையினர் விமர்சகர்களையும், எதிர்கட்சி ஆதரவாளர்களையும் துன்புறுத்தி, அடித்து, சட்டத்துக்கு புறம்பாக கைது செய்கின்றனர். பண்ணைகளை சீர்குலைப்பதும், சொத்துகளை அபகரித்து கொள்வதும் தொடர்ந்தும் நடைபெறுவதுடன், சில சமயங்களில் மூர்க்கத் தனமாகவும் மேற்கொள்ளப்படுகின்றது. 2005 இல் ஆரம்பித்த ஒழுங்கை மீண்டும் ஸ்தாபிக்கும் நடவடிக்கையான "முிநசயவழைெ சுநளவழசந ழுசனநச" இன் கீழ் 700,000 பேர் தமது வீடுகளிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்டதுடன் பலாத்கார வெளியேற்றங்கள் இன்னமும் சிறிய அளவில் தொடர்ந்துக் கொண்டிருக்கின்றது. மனிதாபிமான நிறுவனங்கள் உதவி செய்ய எடுத்த முயற்சிகளில் அரசாங்கம் தலையிட்டது. டிசெம்பர் மாதம் முகாபேயும் அவருக்கு விசுவாசமானவர்களும் அவருடைய ஆட்சி காலத்தை மேலும் இரு வருடங்களுக்கு நீடிக்கும் தீர்மானத்தை எடுத்துள்ளதோடு, ஜனாதிபதி தேர்தலை 2010 வரை தள்ளிப் போட்டுள்ளனர்.

பிடேல் கஸ்ட்ரோ நோய்வாய்ப்பட்டுள்ளதைத் தொடர்ந்து தற்காலிகமாக ராவுல் கஸ்ரோவின் தலைமையில் இயங்கும் **கியூபா** அரசாங்கம், அரசாங்கத்தை அமைதி வழியில் மாற்றக் கூடிய மற்றும் புரட்சியை அல்லது அதன் தலைவர்களை விமர்சிக்கும் உரிமை உட்பட பொதுமக்களின் சகல அடிப்படை உரிமைகளையும் மீறி

வருகிறது. வேறுபட்ட கருத்துடையவர்களையும், ஏனைய குடிமக்களையும் அரசாங்கத்துக்கு அச்சுறுத்துபவர்களாகவே பார்ப்பதனால் அரசாங்கம் 2006 இல் அவர்களுக்கு எதிராக துன்புறுத்தல்களை அதிகரித்துள்ளது. ''மறுப்புகளுக்கான செயற்பாடுகள்'' என அழைக்கப்படும் காடையர்களின் செயற்பாடுகளில் தூஷன வார்த்தைகளும், உடல் தாக்குதல்களும் அடங்குகின்றன. காவல் கைதிகளும், சிறைக் கைதிகளும் அடிக்கப்படுவதோடு தூஷிக்கவும் படுகிறார்கள்; பயமுறுத்தி சம்மதிக்கவும் வைக்கப்படுகின்றனர். இந்த வருடத்தில் சிறைக்கைதிகள் விடுவிக்கப்படுவதாக கூறப்பட்டாலும், 283 அரசியல் சிறை கைதிகளும், காவல் கைதிகளும் வருட முடிவிலும் விடுவிக்கப்படவில்லை. அதில் மார்ச் 2003 இல் திடீரென கைதுசெய்யப்பட்ட ஜனநாயக ஆதரவாளர்கள், மனித உரிமை செயலாளர்கள் 75 பேரில் 59 பெரும் அடங்குவர்.

**சீன** அரசாங்கத்தின் மனித உரிமைகள் அறிக்கைகள் 2006 இல் சில பகுதிகளில் மோசமடைந்துள்ளன. அரசியல், சமய செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் சட்டப்படி அவர்களின் உரிமைகளுக்காக போராடும் பாதுகாப்பு வக்கீல்கள் போன்றவர்கள் மேல் கண்காணிப்பு, துன்புறுத்தல், காவல் வைத்தல், சிறைவைத்தல் போன்ற உயர் மட்ட சம்பவங்களின் எண்ணிக்கைகள் அதிகரித்துள்ளன. அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் சிலரும் துன்புறுத்தப்பட்டு காவலில் வைக்கப்படுகின்றனர். தமது பிரச்சினைகளுக்கு விடை கோரி பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களின் ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்பும் தொடர்ந்தும் நடத்தப்படுகின்றது. இதில் சில சம்பவங்கள் வன்முறையினால் அமுத்தப்படுகின்றன. அரச சார்பற்ற நிறுவனங்கள், ஊடகம் - இன்டர்நெற் உட்பட, நீதிமன்றம், நீதிபதிகள் என்பனவற்றில் அரசாங்கத்தின் புதிய கட்டுபாடுகள் அமுல் செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்யாத சமய குழுக்களும், சிறுபான்மையினர் முக்கியமாக யுகுரும் திபெத்தியர்களும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது மிகுந்த கவலைக்கிடமாகவுள்ளது.

**பலாரஸி**ன் லுகஷென்கோ அரசாங்கம், தொடர்ந்தும் அதன் அடக்குமுறை கொள்கையை தீவிரமாக அமுல் படுத்துகின்றது. மார்ச் மாத ஜனாதிபதி தேர்தலை கடுமையான குறைகளுடன் நடத்தியது. தேர்தல் முடிவுகளில் பொதுமக்களின் எதிர்ப்பை முறியடிப்பதற்காக சுமார் 1,000 பேர் கைது செய்யப்பட்டதோடு அதில் பலர் சிறிது காலம் சிறை வைக்கப்பட்டனர். தீவிரமாக செயற்படுபவர்களும், ஜனாதிபதி லுகஷென்கோவுக்கு எதிராக தேர்தலில் நின்ற அலெக்ஸாந்தர் கொசுலின் உட்பட எதிர்கட்சி அங்கத்தவர்களும் கைது செய்யப்பட்டு 2 தொடக்கம் 51.̇.2 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

**எறித்திறியன்** அரசாங்கம் தொடர்ந்தும் உப – சகாரா ஆபிரிக்காவில் அதிகமான அடக்குமுறையை வைத்திருக்கின்றது; அதன் மனித உரிமைகள் அறிக்கைகள் 2006 இல் மோசமடைந்துள்ளன. அரசாங்க பாதுகாப்பு படையினர் சட்டத்திற்கு புறம்பான கொலைகளை செய்கிறது; பாதுகாப்பு படையினர் எத்தியோப்பிய எல்லைக்குள் நுழைய எத்தனிக்கும் தனிப்பட்டவர்களை கண்ணில் பட்டவுடன் சுட்டு விடுகிறார்களென நம்பத்தகுந்த ஆதாரங்கள் கூறுகின்றன. தேசிய சேவையில் இருந்து தப்பித்துக் கொள்பவர்களையும் அவர்களின் உறவினரையும் கைது செய்தல் அதிகரித்துள்ளது. அவர்களில் சிலர் சித்திரவதைக்கு உள்ளாவார்கள் என நம்பத்தகுந்த ஆதாரங்கள் கூறுகின்றது. ஆபிரிக்காவில் கடுமையான வறட்சி நிலவியும் அரசாங்கம் பல சர்வதேச மனிதாபிமான அரச சார்பற்ற நிறுவனங்களை நாட்டை விட்டு வெளியேறுமாறு 2005 இல் கூறியது போல் 2006 லும் கூறியுள்ளது. மத சுதந்திரம் தொடர்ந்தும் கடுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**நான்காவது நிதானமான உண்மை என்னவென்றால் உலககெங்கும் தனிப்பட்ட, அரசியல் சுதந்திரத்துக்கான அழுத்தம் மேலும் பலமடைந்துள்ள வேளையில், அரசியல் மற்றும் சமூக மாற்றங்கள் தமது ஆதிக்கத்துக்கு அச்சுறுத்தலாக அமையுமென நம்பும் ஆட்சியாளர்களிடமிருந்து எதிர்ப்பு நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளன.**

மனித உரிமைகளை பாதுகாப்பவர்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் ஒரு நாட்டின் வெற்றிக்கு அவசியமாகும். இன்றைய உலகில், பிரச்சினைகளை எதிர்நோக்கும் நாடுகள் மிகவும் சிக்கல் வாய்ந்ததாக இருப்பதனால், அதிக சக்திவாய்ந்தவர்களாலும் அதனை தனியாக கையாள முடிவதில்லை. உள்நாட்டு, சர்வதேசங்களின் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு சிவில் சமூகத்தின் பங்களிப்பும், எண்ணங்கள், தகவல்கள் முதலியன தடையில்லாமல் வருவதும் மிகவும் அவசியமாகும். அரச சார்பற்ற நிறுவனங்களின் அரசியல் இடை வெளிகளையும் பொதுமக்களின் விவாதங்களையும் கட்டுப்படுத்துவது, ஒரு சமூகத்தின் சொந்த வளர்ச்சியை வரையறை செய்து விடுகின்றது.

2006 இல், உலகின் ஒவ்வொரு பகுதியிலும், அரசாங்கங்கள் தனது தனிப்பட்ட அல்லது அரசியல் சுதந்திரத்துக்காக தமது மக்களின் மேல் தமக்குள்ள பொறுப்புகளை நிறைவேற்றாமல் மனித உரிமைகளுக்காக பரிந்து பேசுகிறவர்களையும், துஷ்பிரயோகங்களை வெளிப்படுத்துபவர்களையும், அதாவது அரச சார்பற்ற நிறுவனங்கள், இன்டர் நெற் உட்பட தனியார் ஊடகங்கள் போன்றவர்களை துன்புறுத்துவதன் மூலம் அடைய முயலுகின்றன. குழப்பம் உள்ள பல எண்ணிக்கையான நாடுகள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எதிராக சட்டங்களை வகுத்துள்ளன அல்லது சட்டங்களைத் தேர்ந்தெடுத்து அமுலுக்கு கொண்டு வந்துள்ளனர். அடையாளம் தெரியாதவர்களினால் அரச சார்பற்ற நிறுவனங்களும் ஊடகவியலாளர்களும் நீதிக்குப் புறம்பான முறைகளில் வதைக்கப்பட்டனர். உதாரணமாக:

2006 இல் **ரஷ்யாவில்**, ஒரு புதிய அசாநி சட்டம் ஏப்ரல் மாதம் கொண்டு வரப்பட்டது. அதில் கடுமையான பதிவு தேவைகளை அசாநி யிடம் கேட்டுள்ளதோடு, நிறுவனம் கண்டிப்பாக கண்காணிப்புக்கு உள்ளாவதோடு, அவர்களின் நிகழ்ச்சித் திட்டங்களையும் நடவடிக்கைகளைப் பற்றிய விரிவான, பொறுப்பு நிறைந்த அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன், அரச பதிவு சேவை (குநனநசயட சுநபளைவசயவழை ளுநசஎஉை) திணைக்களத்திற்கு, அசாநி யின் பதிவை மறுத்து விடுவதற்கோ அல்லது மூடிவிடுவதற்கோ அதிகாரம் கொடுத்துள்ளது. உணர்வுகளின் வெளிப்பாடும், ஊடக சுதந்திரமும் அரசாங்கத்தின் அழுத்தத்தினாலும், கட்டுப்பாட்டினாலும் வீழ்ச்சியடைந்துள்ளது. ஒக்டோபர் மாதம், மனித உரிமைகள் காப்பாளரும் செச்சினியாவில் மனித உரிமைகள் துஷ்பிரயோகத்தைப் பற்றிய விமர்சனங்களை எழுதும் பிரசித்திப் பெற்ற ஊடகவியலாளருமான அனா பொடிகோவிகாயா அடையாளம் தெரியாதவர்களினால் கொலை செய்யப்பட்டார். அரசாங்கம் அனைத்து தேசிய தொலைக்காட்சி, வானொலி நிலையங்களையும், வெளிப் பிரதேசங்களிலுள்ள பெரும்பாலான செல்வாக்குள்ள சேவைகளையும் அதன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதனால், நுணுக்கமான தகவல்கள் கிடைக்கவுள்ள வழிகளை மறித்துள்ளது.

**பெல்லாரஸி**ல் தொந்தரவான வரி பரிசோதனைகளும், அசாநி பதிவு தேவைகளும் சிவில் சமூக நிறுவனங்கள் செயற்படுவதை சிரமத்திற்குள்ளாக்குகின்றன. சுயேட்சை ஊடகவியலாளர்களின் மீதான தாக்குதல்களும் தொடர்கின்றன. பதிவு செய்யப்படாத அசாநி யை நடத்தி வந்த குற்றத்திற்காக தீவிர ஜனநாயக ஆதரவாளரான டிமித்ரி தஷ்கெவிக் 18 மாத சிறைத்தண்டனையைப் பெற்றுள்ளார்.

**கஸகஸ்தான்** அரசாங்கம் ட்றூ அக் சோல் எதிர்க்கட்சியை அதன் இணை தலைவர் சரசென்பெயுலி கொல்லப்பட்டதை தொடர்ந்து பதிவு செய்துள்ளது.
தகவல்கள் கொடுப்பது அரசியல் கட்சிகளுக்கு நிதியளிப்பதற்கு சமனானது என்பதனால் வெளிநாடுகளின் நிதியை பெற்று பயிற்சி நடவடிக்கைகளைச் செய்யும் அரசுக்கு சார்பற்ற அரசியற் கட்சிகளை நீக்கி விட வேண்டுமென அரசியல் சட்டம் ஷாத்து 5 எல்லைக்குட்பட்டு விளக்கம் அளிக்கின்றது. ஐரோப்பிய சுதந்திர ஊடக பிரதிநிதித்துவத்தைக் கொண்ட பாதுகாப்பு மற்றும் கூட்டுறவுக்கான அமைப்பின் படி ஜனாதிபதி நசர்பாயீவ் ஜுலை மாதம் கையொப்பமிட்ட ஊடக சட்ட சீர்திருத்தங்கள் சுதந்திர ஊடகத்துறையையும் நாட்டையும் ஒரு படி பின் தள்ளியுள்ளது. தொடர்ந்தும் அரசாங்கம் கட்டுப்படுத்தப்பட்ட அவதூறான சட்டங்களை ஊடக வெளியீடுகள், ஊடகவியலாளர்கள், விமர்சகர்களுக்கு அபராதம் விதிக்கவும் குற்றம் சுமத்தவும் அல்லது விலக்கி வைக்கவும் பயன் படுத்துகின்றது. ஏப்ரல் மாதத்தில் தடைசெய்யப்பட்ட ஒரு ஊடகத்தின் அங்கத்தவர் அடித்துக் கொல்லப்பட்டார்.

**டர்க்மெனிஸ்தானில்** கட்சி, சங்கங்களை அமைப்பதற்குமான சுதந்திரங்கள் கடுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் அரசாங்கம் அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களினதும் செயற்பாடுகளை கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. வெளிநாட்டில் தொழிற்படும் செயற்கோள் மூலமான தொலைக்காட்சி நாடெங்கிலும் தெரிகின்றது. ஆனால் அரசாங்கம் அனைத்து உள்நாட்டு தொலைக்காட்சிகளையும் உள்ளூர் ஊடகங்களையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதோடு, வெளிநாட்டவருடனான அனைத்து விதமான தொடர்புகளையும் விசேட அனுமதி பெற்றிருந்தால் ஒழிய தடுக்கின்றது. மிகக் குறைந்த இன்டர்நெட் வசதிகளே அரசாங்கத்துக்கு சொந்தமான துர்க்மன் டெலிகம் மூலமாக கொடுக்கப் பட்டுள்ளன. 2002 செப்டெம்பர் முதல் எவ்விதமான புதிய இன்டர்நெட் இணைப்புகளும் அனுமதிக்கப்படவில்லை. ஆகஸ்ட் மாதம் அரசாங்கம் ஊடகவியலாளர்கள் ஒகுல்ஸ்பாபர் மிராடோவா, அனாகுர்பன் அமனகளிசேவ், சபாருடி ஹஜியேவ் ஆகியோரை கைது செய்து மூடிய உடனடியான விசாரணையில் அவர்கள் ஆயுதம் வைத்திருந்தார்கள் என்னும் குற்றச்சாட்டில் ஆறு தொடக்கம் ஏழு வருட தண்டனையை கொடுத்துள்ளது. செப்டெம்பர் மாதத்தில், ஐரோப்பிய சுயேட்சை வானொலி.்.சுதந்திர வானொலி நிருபர் மைரடோவா சிறையில் சந்தேகத்துக்கு இடமான முறையில் கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். ஆயுதங்கள் தம் வசம் வைத்திருந்ததாக ஒப்புக் கொள்ளும்படி தடுப்புக் காவலில் இருக்கும் வேளையில் அவரும் அவரின் சகாக்களும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனரென அரச சார்பற்ற நிறுவனங்கள் கூறுகின்றன. டிசெம்பர் 21 ஆம் திகதி, ஜனாதிபதி சபாமுரட் நியாசோவ் இறந்தார்.

**யுசெபெகிஸ்தான்** அரசாங்கம் பெரும்பாலான அரச சார்பற்ற நிறுவனங்களை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுடன், நாட்டில் செயற்பட்டுக் கொண்டிருந்த சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட 200 சிவில் சமூக நிறுவனங்களை சட்டத்தை மீறியதாகக் காரணம் காட்டி மூடிவிட்டது. சுயேச்சை ஊடகவியலாளர்களும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும் தொடர்ந்தும் துன்புறுத்தப் படுகின்றனர்.

**சிரியாவின்** அரசாங்கம் தகவல்களை பரப்புவதையும், அரசாங்கத்தை குற்றம் கூறுவதையும் வகுப்புவாத பிரச்சினைகள், சிறுபான்மையினரின் உரிமைகள் என்பவற்றைப் பற்றி உரையாடுவதையும் கடுமையான கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. இந்த கட்டுப்பாடுகளை மீறி அவர்களின் கருத்துகளை வெளியிட்ட தனி நபர்கள் காவலில் இடப்பட்டு அடிக்கப்பட்டனர். உதாரணமாக பெப்ரவரி மாதம், நபிகள் நாயகத்தின் படம் காட்டூனாக சித்தரிக்கப்பட்ட சர்ச்சையின் பின் மதங்களுக்கு இடையான உரையாடல்களின் அவசியத்தைக் கூறிய ஊடகவியலாளர் அடெல் மஹ்பூஸ் கைது செய்யப்பட்டார். இன்டர்நெட் பாவனையை தணிக்கை செய்ய அரசாங்கம் தனது செய்தி தாள் மற்றும் பிரசுர சட்டத்தையும், தண்டனைக் கோவையையும், அவசர கால சட்டத்தையும் உபயோகிக்கிறது. மேலும் இலத்திரணியல் ஊடகங்களையும் கட்டுப்படுத்துகிறது. உள்நாட்டு மனித உரிமை செயற்பாட்டாளர்களும் துன்புறுத்தலுக்கு உள்ளாகின்றார்கள். அதில் சீரான அண்மித்த மேற்பார்வை செய்வதும், வெளிநாடுகளுக்கு தொழில் பட்டறைகள், ஆலோசனை கூட்டங்கள் போன்ற காரணங்களுக்காக செல்லும் பயணங்களுக்கு தடை விதித்தலும் அடங்குகின்றன.

**இரானில்** ஊடக சுதந்திரம் என்றுமில்லாத அளவு வீழ்ச்சியடைந்துள்ளது. அரசாங்கம் சார்க், இரான் என்னும் பத்திரிகைகளை மூடச் செய்ததோடு இன்டர்நெற் செய்திகளை – நியூயோர்க் டைம்ஸ், பீபீசி பார்சி உட்பட – பெறுவதற்கு தடை விதித்து, ஊடகவியலாளர்களையும் இணையத்தள செய்திகளுக்கு தமது கருத்துகளை பகிர்ந்தளிப்பவர்களையும் சிறைப்படுத்தியுள்ளது. நாட்டை விட்டு வெளியேறுவதற்கு ஏற்படுத்தியுள்ள தடையை, ஊடகவியலாளர்களுக்கு எதிராக ஒரு ஆயுதமாகப் பயன் படுத்துகின்றனர்.

**புருண்டியில்** கைது செய்தல், காவல் வைத்தல், ஊடகவியலாளர்களையும் மனித உரிமை செயற்பாட்டாளர்களையும் அரசாங்கம் பயமுறுத்தி சம்மதிக்க வைத்தல் போன்றவை அதிகரித்துள்ளது; வேறு பல தனி நபர்களுடன் நாட்டின் முக்கியமான ஊழல்களுக்கு எதிரான அரச சார்பற்ற நிறுவனத்தின் தலைவரை கைது செய்து பல மாதங்களுக்கு காவலில் வைத்திருந்தது. ஒரு மாகாண ஆளுநர் பலமுறை நாட்டின்

முக்கியமான அரச சார்பற்ற நிறுவனமான லீக் இடெகா வை சமாதானத்தின் பகைவன் என்று அழைத்துக் கொண்டிருந்தார். நவம்பர் மாதம் ஒரு அரசாங்க அதிகாரி, பதிவு செய்திருந்த 32 அரச சார்பற்ற நிறுவனங்களை அது கடமையாக செய்ய வேண்டிய அதன் வருடாந்த அறிக்கைகளை அரசாங்கத்துக்கு கொடுக்கத் தவறியமையால் வெளியேற்றப்படலாம் என அறிவித்திருந்தார்.

**ருவண்டாவில்** சிவில் சமூகம் செயலாற்றுவதற்கு ஒரு கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலையே உள்ளது. உள்நாட்டு, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் சட்டப்படி வருடாந்தம் பதிவு செய்துக் கொள்வதோடு அதன் நடவடிக்கைகளைப் பற்றி அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வெளிநாட்டு நிதி உதவியைப் பெறுவதற்கு முன்னராக அரசாங்கத்தின் சட்டப்படியான அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு சில அரச சார்பற்ற நிறுவனங்கள் அரசாங்கத்தினால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். அத்துடன், சகல அரச சார்பற்ற நிறுவனங்களும் தமது நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள ஒரு அமைப்பில் இணைய வேண்டுமென நிர்ப்பந்தப் படுத்தப்பட்டுள்ளனர்.

**வெனிசுவேலா** அரசாங்கம் தொடர்ந்தும் சிவில் சமூக குழுக்களை துன்புறுத்தி, பயமுறுத்தி சம்மதிக்க வைக்கின்றது. அதில் மிகவும் குறிப்பிடவேண்டியது, அரச சார்பற்ற நிறுவனமான தேர்தல் கண்காணிப்பு (நடநஉவழசயட றயவஉானழப) சுமாடெ யின் தலைவர்கள், வெளிநாட்டு மானியத்தைப் பெற்றுக் கொண்ட காரணத்திற்காக சதியும் இராஜ துரோகத்திலும் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதாகி அவர்களின் வழக்கு விசாரணை தொடர்ந்து காலவரையின்றி பின்தள்ளப்பட்டு வரப்படுகின்றது. வருட முடிவில் பாராளுமன்றத்தில், அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதிகளையும், அவர்களின் மனித உரிமைகள், ஜனநாயகத்தை வளர்க்கும் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துக்கூடிய, கூடிய அதிகாரங்களை அரசாங்கத்துக்கு அளிக்கும் புதிய சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டது. தண்டனைக்குரிய சட்டங்களின் திருத்தங்கள், அரசாங்க அதிகாரிகளை அவமதிப்பதற்கு சிறைத் தண்டனையை அளித்திருப்பதும், ஊடகவியலாளர்கள் கடுமையாக தாக்குதல்களுக்கு உள்ளாவதும், அவர்கள் சுய தணிக்கைகளை மேற்கொள்வதற்கு வழிவகுத்துள்ளது. அரசாங்கம் சுயேச்சை மற்றும் எதிர்கட்சிகளின் செய்தி வெளியீடுகளுக்கு இடைஞ்சல் கொடுப்பதை அதிகரித்துள்ளது. டிசெம்பரில் ஜனாதிபதி சவேஸ், நாட்டின் மிகப் பழைய வர்த்தக தொலைக் காட்சி வலையமைப்பான ரேடியோ கரகாஸ் தொலைக் காட்சிக்கு அதன் ஒலி பரப்புவதற்கான அனுமதியை அரசாங்கம் மீண்டும் புதிப்பிக்கப் போவதில்லை என அறிவித்துள்ளார். அரசாங்கம், அந்த வலையமைப்பின் உரிமையாளர்களை ''சதி விஷமிகள்'' எனவும் பொதுமக்களின் நம்பிக்கைகளை மீறுபவர்கள் எனவும் குற்றம் சுமத்தியுள்ளது.

**சீனா**வில், உள்நாட்டு, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் அதிகரித்த நுட்ப சோதனைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் முகங்கொடுக்கின்றன. 2006 இன் முடிவில், எல்லைகள் இல்லாத நிருபர்கள் (சுநிழசவநசள றவைாழரவ டீழசனநசள) இன் 31 ஊடகவியலாளர்களும் 52 இன்டர்நெற் எழுத்தாளர்களும் சிறையில் இருப்பதாக அறிவித்துள்ளது. அரசாங்கம் இன்டர்நெற் பாவனையை ஊக்கமளிக்கின்றது; அதே நேரம் அதன் பாவனையைக் கண்காணிக்கவும், அதன் உள்ளடக்கத்தை மேற்பார்வை செய்யவும், தகவல்களை கட்டுப்படுத்தவும், சட்டங்களை மீறுபவர்களுக்கு தண்டனை அளிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுத்துள்ளது. அரசாங்கம் இணையதளத்துக்கு கடுமையான பதிவு தேவைகளைக் கேட்டுள்ளதோடு ஒன்லைன் உள்ளடக்கங்களை கட்டுப்படுத்தி, சட்ட விரோதமான ஒன்லைன் உள்ளடக்கங்களுக்கான வரையறைகளை விரிவுப்படுத்தியுள்ளது. அரசாங்கம் பிரச்சினைக்குரியதெனக் கணிக்கும் தளங்களை சீராக மறைத்து நிறுத்துவதோடு, அதிகாரிகள் மேலதிக தொழில் நுட்ப விஞ்ஞானத்தை பயன்படுத்தி, முழு இணைய தளத்தையும் அல்லாமல், குறிப்பிட்ட உள்ளடக்கங்களை மட்டும் தடுத்து மறைக்க ஆரம்பித்துள்ளது.

**வியட்நாம்** தொடர்ந்தும் இன்டர்நெற்டை கட்டுப்படுத்தி, சர்வதேச மனித உரிமைகள், அதன் செய்திகளை இணையதளத்தில் இருந்து மறைத்து விடுகின்றது. சட்டம் திறனற்ற அரசாங்கத்தையும், ஊழலையும் பற்றி வெளிப்படையாக குற்றம் சுமத்துவதற்கு அனுமதி அளித்துள்ளது, ஆனால் அரசாங்கம் தொடர்ந்தும், பொதுவுடமை கம்யூனிஸ்ட் கட்சிகளின் பங்களிப்பைப் பற்றி கேள்வி கேட்க்கப்படும்,

பன்முகத்தன்மை பல கட்சி ஆட்சிமுறைகளை ஊக்கிவிக்கும் அல்லது மனித உரிமைகள் கொள்கையை விபரிக்கும் கட்டுரைகளை ஊடகங்கள் எழுதுவதற்கு தடை விதித்துள்ளது. அரசாங்கம் தனியார் சேவைகளை வழங்குபவர்களிடம் இருந்து நேரடியான இன்டர்நெற் தொடர்பை பெற்றுக் கொள்வதை தடை செய்துள்ளதோடு, சைபர்கபே உரிமையாளர்களிடம் அதன் அங்கத்தவர்களின் தனிப்பட்ட விபரங்களையும், அவர்கள் பார்க்கும் தளங்களைப் பற்றியும் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளது. அரசாங்கம், சில உயர்மட்ட அரசியல், சமய கருத்து வேறுபாட்டர்களை, ஜனநாயகத்தைப் பற்றிய கட்டுரைகளை மொழிபெயர்த்து இன்டர்நெற்றில் பரவச் செய்த காரணத்தினால் சிறையில் அடைக்கப்பட்டிருந்த டாக்டர் பாம் ஹொங் சன் உட்பட விடுதலை செய்துள்ளது.

**ஓரினத்தை அழிப்பது மிகவும் நிதானமான உண்மைநிலை ஆகும்**

மனித உரிமைகளுக்கான ஐநா வின் உலகளாவிய பிரகடனத்தை ஏற்றுக் கொண்டு 60 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் - இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பேரழிவுகளின் அபரிதமான அளவும் அதன் ஊக்கியும் மனித வர்க்கத்தினர் அதனையிட்டு அடைந்த பெருந்துயரங்களை தெளிவாக அறிவித்தும் - சூடானின் டாபூர் பகுதிகளில் தொடர்ந்தும் ஓரின அழிப்பு நடந்து கொண்டிருக்கின்றது.

**சூடானில்**, ஜனவரி 2005 இல் கூட்டு சமாதான ஒப்பந்தம் வடக்கு, கிழக்குக்கு இடையிலான 22 வருட சிவில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து, ஒரு ஐக்கிய அரசை உருவாக்கியிருந்தாலும், இன போராட்டங்கள் தொடர்ந்து கொண்டே, முக்கியமாக டாபூரில் பேராபத்துகளுடன் இருக்கின்றது. சூடானிய அரசாங்கமும், அரசாங்கம் ஆதரவளிக்கும் ஜன்ஜாவீட் போராளிகளும் டாபூரில் ஒரு இன அழிவுக்கு பொறுப்பாக இருக்கின்றனர். அத்துடன் கிளர்ச்சிக்கான அனைத்து கட்சிகளும் கடுமையான துஷ்பிரயோகங்களை பெருந்திரளான குடிமக்களை கொலை செய்தல், யுத்தத்தின் ஒரு ஆயுதமாக கற்பழித்தல், சீரான சித்திரவதை, திருட்டு, சிறுவர்களை யுத்தத்திற்காக ஆள் சேர்த்தல் போன்ற வழி முறைகளில் செய்கின்றன. 2006 முடிவில் டாபூர் யுத்தம், 200,000 பொதுமக்களின் கொலைகளுக்கும் இரண்டு மில்லியன் மக்களின் இடப்பெயர்வுக்கும் காரணமாகியது. 234,000 அகதிகள் அண்டை நாடான சாட் நாட்டுக்கு தப்பிச்சென்றனர். சாட்டும், மத்திய ஆபிரிக்க குடியரசும் சூடானை அண்மித்த அதன் எல்லைகளில் கொடூரமான இன போராட்டங்களை அனுபவிக்கின்றன.

சூடானிய அரசாங்கம் அடிஸ் அபாபா சட்டவரம்புக்கு ஆதரவு கொடுப்பதாக தெரிவித்தாலும், வெளிப்படையாக சர்வதேச படைகள் டாபூருக்கு வருவதற்கு மறுப்பு கூறுவதோடு, அதன் இராணுவ தாக்குதல்களை 2006 பிற்பகுதியில் மீண்டும் ஆரம்பித்துள்ளது. மோசமடைந்து வரும் பாதுகாப்பு நிலைமைகளின் காரணத்தினால் சில அரச சார்பற்ற நிறுவனங்களும், மனிதாபிமான ஸ்தாபனங்களும் அதன் செயற்பாடுகளை ஒன்று குறைத்துக்கொண்டன, அல்லது முற்றிலும் நிறுத்தி விட்டன.

**காப்பாளர்களைக் காப்பாற்றவும்**

<u>ஐநா உலகளாவிய மனித உரிமைகளின்</u> பெரும் வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டுமானால், சர்வதேச சமூகம் - அதிலும் முக்கியமாக உலகில் உள்ள ஜனநாயகங்கள் - இன்றுள்ள நிதானமான உண்மை நிலைமைகளை பிடிவாதமாக மாற்ற முடியாது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. உண்மையிலே, மனித கௌரவத்துக்காகவும் அரசியல் மாற்றங்களுக்காகவும் பாடுபடுவோருடன் நாமும் அணி சேர எம்மைக் கடமைப்படுத்துகிறது.

2006 இல் மனித உரிமைகள் காப்பாளர்களின் தைரியமான முயற்சிகள் ஜனநாயக நாடுகளினால் வெளிப்படுத்தப்பட்டது.

2006 இல் ஐக்கிய நாடுகளின் பொது சபையில் எடுக்கப்பட்ட நாடுகளுக்கான தீர்மானங்களில், இரான், பலாரஸ், வட கொரியா மற்றும் பர்மாவில் மனித உரிமைகள் காப்பாளர்களை பாதுகாக்க வேண்டிய அவசியம் வலியுறுத்தப் பட்டது.

**ஐநா ஜனநாயக நிதியுதவிகள்,** 2004 இல் கூறப்பட்டு 2005 இல் அமுலாக்கப்பட்ட ஜனாதிபதி புஸ்ஸின் கருத்துகள் ஒரு வருடத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்து விட்டது. இந்த சபை 100 க்கும் மேலான நாடுகளிலிருந்து வரப்பட்ட 1,300 பிரேரணைகளில் 125 செயற்திட்டங்களுக்காக கூ35 மில்லியன் நிதியுதவியை ஜனநாயக ஆதரவு சிவில் சமூக ஸ்தாபனங்களுக்கு கொடுத்துள்ளது.

ஜுன் 2006 இல் பிரதேச மட்டத்தில் அமெரிக்க நாடுகளின் அமைப்பு (முசபயளைெயவழைெ ழக யுஅநசழைஉயெ ளுவயவநள - முயுளு) டின் பொது சபை சன்டா டொமினிகோ பிரேரணையை பின்பற்றி ‘‘தணிக்கை செய்யப்படாத அரசியல் விவாதங்களில் ஈடுபடுதல், கருத்துகளை சுதந்திரமாக இன்டர்நெற் உட்பட அனைத்து விதமான ஊடகங்களினூடாகவும் பரிமாரிக்கொள்ளுதல் போன்ற ஒவ்வொரு தனி நபரின் உணர்வுகளை வெளிப்படுத்தும் சுதந்திரத்துக்கும் உத்தரவாதம் அளிக்கும்’’ புதிய மாற்றங்களை உண்டாக்கக் கூடிய அர்ப்பணிப்புகளை பிரதேசங்களில் உள்ள நாடுகள் எடுத்துள்ளன. வெளிநாட்டு அமைச்சர்கள் இதனை நடைமுறைப் படுத்துவதற்கான அனைத்து ஊக்கங்களையும் செயற்பாடுகளையும் செய்வதற்கான உறுதி மொழியை பிரேரித்துள்ளனர்.

மனித உரிமைகள் காப்பாளர்களுக்கான முயுளு – அமெரிக்க நாடுகளுக்கிடையிலான ஆணைக்குழுவின் மனித உரிமைகள் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் சில நாடுகளில் அவர்கள் முகங்கொடுக்கும் பாரிய பிரச்சினைகளையும், அரசாங்கங்கள் அவர்களின் காரியங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளது.

ஜுலையில் நடக்கவிருந்த ஆபிரிக்க யூனியன் நாடுகளின் தலைவர்கள் கூட்டத்திற்கு முன்னதாக 19 ஆபிரிக்க நாடுகளில் இருந்து சிவில் சமூக நிறுவனங்கள் கம்பியா, பன்ஜுலில் கூடின. அங்கு, சிவல் சமூக பங்களிப்பு ஒப்பந்தத்துக்கு கட்டுப்பட்ட ஆபிரிக்க நட்பு நாடுகளில், சிவில் சமூகம் தகவல்களை பெறுவதற்கும், சிறுபான்மை யாளர்களை வேற்றுமைப்படுத்தும் குடியுரிமை சட்டங்களை திருத்துவதற்குமான வழிகளுக்கான மீள்பார்வை செயல் நுட்பங்களை அபிவிருத்தி செய்வதைப்பற்றி கூட்ட தலைவர்களுக்கான சிபாரிசுகள் கொடுக்கப்பட்டன. கூட்டத்தில் இந்த சிபாரிசுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

**விரிவான மத்திய கிழக்கு வட ஆபிரிக்க** பிரதேசங்களில் **எதிர்காலத்தின் செயலமர்வுகள்** அரசாங்க அதிகாரிகளையும், சிவில் சமூக பிரதிநிதிகளையும், பு – 8 பங்காளிகளையும் ஜோர்தான் சாக்கடலில் இணைய வைத்தது. பிரதேசத்தைச் சேர்ந்த 16 நாடுகளின் நூற்றுக் கணக்கான நிறுவனங்களை பிரதிநிதித்துவம் செய்யும் சுமார் 50 சிவில் சமூக பிரதிநிதிகள் இதில் பங்களித்து, நியாயமான ஆளுமைச் சட்டம், வெளிப்படைத் தன்மை, பெண்கள், இளைஞர்களை வலுவூட்டல் மற்றும் சிவில் சமூக நிறுவனங்களின் சட்ட சூழ்நிலைகள் என்பதைப்பற்றி ஆலோசித்தனர். மேலும், சிபார்சுகளை பின்பற்றுவதற்கு, எப்படி செயல் நுட்பங்களை அமுலாக்கி சீர்திருத்தங்களை பலப்படுத்துவது என ஆலோசிக்கப்பட்டது. மிகச் சிரமமான பகுதி இனிமேல் வர இருந்தாலும் - சிவில் சமூகத்தினரால் முன்மொழியப்பட்ட சிபாரிசுகளை ஏற்றுக் கொண்டு அமல்படுத்துவது – சிவில் சமூக நிறுவனங்களை அமைப்பதற்கும் அப்பிரதேசங்களில் உள்ள அரசாங்கங்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளவும் இருக்காத அரசியல் இடைவெளியை செயலமர்வுகள் கொடுத்துள்ளன.

டிசெம்பர் 2006 இல் மனித உரிமைகள் தினத்தை குறிப்பதற்கு செயலாளர் ரைஸ் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக காப்பாளர்களுக்கு உதவி செய்வதற்காக இரண்டு முக்கிய ஐக்கிய அமெரிக்க பூர்வாங்க வேலைகளை ஆரம்பித்து வைத்தார்.

அவர் இராஜாங்க திணைக்களத்தினால் நிர்வாகம் செய்யப்படும் **மனித உரிமைகள் காப்பாளாகள் நிதியுதவி** ஒன்றை ஆரம்பித்து, அது அரசாங்கங்களின் அடக்குமுறைகளினால் அசாதாரணமான தேவைகளை எதிர்நோக்கும் மனித உரிமைகள் காப்பாளர்களுக்கு தேவையான மானியங்களை உடனடியாக பகிர்ந்தளிக்க

உதவும் என அறிவித்தார். இந்த மானியம் அவர்களின் சட்ட பாதுகாப்பு, மருத்துவ செலவு அல்லது செயற்படுவோரின் குடும்பங்களின் தேவைகள் என்பனவற்றுக்காக செலவிடப்படும்.

செயலாளர் ரைஸ் பத்து வழிகாட்டல் அசாநி அடிப்படை கொள்கைகளை அரசாங்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களை நடத்த வேண்டிய முறைகளுக்காக வெளியிட்டுள்ளார். இந்த மைய அடிப்படை கொள்கைகள் அசாநி களை அமெரிக்கா நடத்துவதற்கும், அவை ஏனைய அரசாங்கங்களின் நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வதற்கும் வழிகாட்டும். இந்த அடிப்படை கொள்கைகள் மனித உரிமைகள் காப்பாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேவையான நீண்ட, விபரமான ஐநா வினதும், மற்றைய சர்வதேச ஆவணங்களைத் தயார் செய்யவும் அரசாங்கங்களுக்கும், சர்வதேச நிறுவனங்களுக்கும், சிவில் சமூக அமைப்புக்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் உதவும் வளமாக இருக்கவும் அசாநி களுக்கு உலகெங்கும் ஆதரவைப் பெறுவதற்குமாகும்.

மனித உரிமைகளுக்காக வாதிடுபவர்களினதும், சிவில் சமூக அமைப்புகளினதும் வேலைகளுக்கு ஜனநாயகங்கள் ஆதரவு கொடுக்கும் பட்சத்தில், உலக நாடுகள் எங்கும் உள்ள ஆண்களும் பெண்களும் அவரவர்களுக்கான சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் வழி வகுக்குகின்றோம். அப்படி செய்வதன் மூலமாக நாம் அனைவருக்கும் ஒரு பாதுகாப்பான, சிறந்த உலகைப் படைப்பதற்கு உதவுகின்றோம்.

நாம் காப்பாளர்களைக் காப்பாற்ற வேண்டும்; ஏனெனில் அவர்களே அமைதியாக ஜனநாயக மாற்றத்தை ஏற்படுத்தும் பிரதிநிதிகள்.